## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.40/2019 வா.சா.1 ஓம்பிரகாஷ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

5) வழக்கு உறுத்துக்கட்டளை பரிகாரத்தை என் வீட்டிற்கு கோரியுள்ளேனா அல்லது தடத்திற்கு கோரியுள்ளேனா என்றால் தடத்திற்கு கோரியுள்ளேன். வழக்கு சொத்து விவரத்தில் தடம் பற்றி குறிப்பிட்டு உள்ளேனா என்றால் 12 அடி சந்து என குறிப்பிட்டு உள்ளேன். எனது கிரைய ஆவண சொத்து விவரத்தில் 12 அடி சந்து என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நத்தம் சந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து விவரித்திலோ வா.சா.ஆ. 1 ஆவண சொத்து விவரத்திலோ நான் கோரும் நத்தம் சந்தின் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இரண்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து விவரித்தில் நான் கோரும் நத்தம் சந்தின் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) 2019 ல் வழக்கு சந்தினை நான் பயன்படுத்துவதை பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக கூறும் நிலையில் அதற்கு போலீசில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. மேற்படி தேதியில் வழக்கு சந்தினை நான் அனுபவிப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்றால் இல்லை. மேற்படி நத்தம் சந்து சூலக்கல் கிராம ஊராட்சிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நத்தம் சந்தில் எனக்கு மட்டும் தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் வேறு யாரும் அந்த சந்தினை பயன்படுத்த தேவையில்லை பயன்படுத்தவும் கூடாது.

7) மேற்படி நத்தம் சந்து புல எண். 419/7 ல் அமைந்து உள்ளதால் அதை சுற்றி நான்கு புறமும் இருப்பவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. அதே போல் பிரதிவாதிகளும்

சாலையை அடையவும் பிறவடைக்கு செல்லவும் மேற்படி நத்தம் சந்தினை பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 முதல் வா.சா.ஆ. 4 ரசீதுகள் என் வீட்டிற்கானது என்றால் சரிதான். மேற்படி நத்தம் சந்திற்கான வரி செலுத்தியதான நான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நத்தம் சந்து கிராம ஊராட்சிக்கு பாத்தியப்பட்டதால் நான் தனிப்பட்ட உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி